[7th March 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே ஒன்றுமே செய்ய முடியாது. பழுப்பு நிலக்கரி அகப்பட்டாலும் அது ½" திக்னஸ் தான் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : அந்த நிலக்கரியை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எடுக்கலாமா வேண்டாமா என்று ஆராய்ச்சி நடந்து எடுப்பதில் பயன் இல்லை என்ற முடிவுக்கு வரப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த அணு மின்சார நிலையம் ஆரம்பிப்பதால் அனல் மின்சாரத்தின் சக்தி குறையுமா அல்லது கூடுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேள்வி புரியவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மேலே அணு மின்சாரமும், கீழே அனல் மின்சாரமும் இருக்கிறது. அணு மின்சார உற்பத்தி அதிகப்படுகிற நேரத்திலே அனல் மின்சாரம் குறையுமா அல்லது கூடுமா என்று கேள்வி கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எவ்வளவு மின்சாரம் நமக்குத் தேவையோ அதற்கு எந்த எந்த முறையில் உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வாறு செய்யப்படும்.

Cellular Concrete Plan at Ennore

* 190 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Cellular Concrete Block Factory in the State ; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Government have under consideration a proposal to set up a Celluar Concrete Plant at Ennore (Madras) at a cost of Rs. 121·28 lakhs with foreign assistance. Fifty per cent of the cost of the Project will be financed from the Central Plan as loan and the other 50 per cent will be met from the State Plan. The price of the Cellular Bricks may compare favourably with the price of ordinary bricks.

திரு. வை. சங்கரன் : இதனுடைய புரொடக்ஷன் கெப்பாஸிடி ஆண்டுக்கு எவ்வளவு இருக்கும்? இது என்ன, என்ன காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும்? பிரைவேட் செக்டாரின் மூலம் பயன்படுத்தப்படுமா? அல்லது பப்ளிக் செக்டாரின் மூலம் பயன் படுத்தப்படுமா ?

7th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : செங்கல் மாதிரி உபயோகப் படுத்தப்படும். பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் என்று இல்லாமல் எல்லோருக்கும் இது பயன்படும். இதனுடைய புரொடக்ஷன் கெப்பாசிடி 91 ஆயிரம் க்யூபிக் மீட்டர்ஸ்.

'சிமெண்ட்' ஆலை

*191 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்டந்தோறும் சிமெண்ட் ஆலை துவக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

சித்த வைத்தியர்கள்

*192 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பாரம்பரை சித்த வைத்தியர்களை வாய்மொழித் தேர்வு வைத்துப் பதிவு செய்யப்படுகிறதா ?

(இ) ஆமெனில், அந்தத் தேர்வுகள் எந்தெந்த ஊர்களில் நடத்தப்படுகின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) (1) கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்கு கோயம்புத்தூரிலும், (2) சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்குச் சென்னையிலும், (3) கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்குப் பாளையங்கோட்டையிலும் ஆக மூன்று இடங்களில் வாய்மொழித் தேர்வுகள் (oral tests) நடத்தப்படுகின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இதுவரை எத்தனை சித்த வைத்தியர்களுக்கு சர்டிபிகேட் வழங்கப்பட்டிருக்கிறது ? அவர்கள் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரிகளிலே வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும். அவர்களுடைய அப்ளிகேஷன்களையெல்லாம் ஆராய்ந்து, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி : அந்தத் தேர்வு நடத்துகிற அதிகாரிகள் எத்தகைய திறமை வாய்ந்தவர்களாக எடுக்கப்படுகிறார்கள் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Administrative Officer and ex-officio Deputy Secretary to Government, Education & Public Health Department, Principal, College